முருகப்பெருமான் துணை
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 666**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

26.07.2021, திங்கட்கிழமை

1. தவமெனும் சக்தியே அரங்கா
தரணிகாத்திடும் ஞான தேசிகா
புவனம் உன்னால் மாற்றம் பெற
புண்ணிய வழிகாட்டும் ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரமென உன்வழி உலக மக்கள்
வணங்கி தொடர்ந்து என்னை வருக
3. திறம்பட உலகமக்கள் தேர்வு செய்யப்பட்டு
தேசிகன் உன் வழி ஞானிகள் ஆவரென்பேன்
என்கவே அரங்கா முருகா எனும் எழுச்சிபெறும் முழக்கம் எங்கும் ஒலிக்க பெருமைபட
ஆறுமுகன் என் வெளிப்பாடு பேருலகம் எங்கும் இனிதே கண்டு
4. கண்டுமே கலியுக மாற்றம்
கந்தவேலன் என்னருளால் சடுதி காணும்
சிந்தைவைத்து உன்னை தொடர்ந்து வரும் மக்கள் மூலம்
செப்பிடுவேன் இந்த அற்புதம் சடுதி நிகழும்
5. நிகழவே நிலைத்தன்மை கொண்ட அரங்கா
நீதிநெறிபட நீகாட்டும் சன்மார்க்கத்தை சளைக்கா தொடர்ந்து உலக மக்கள் ஏற்று வர
சர்வமும் அரங்கன் சன்மார்க்கமாகி பிழையில்லாத ஞானயுக மாற்றம்
பெருந்தயவால் சடுதி நிகழக்கூடும்
6. கூடவே அரங்கனே முருகனே
குருபரனே என்று வேண்டி வரும் மக்கள் மூலம்
நாடெங்கிலும் அற்புதம் பாதுகாப்பு மிக்க
ஞான ஆட்சிக்காலமாக மாற்றம் பெறும்
7. மாற்றம் தருவதே உயர் கொள்கையாக
மக்களை நோக்கி கரம் நீட்டி வரும்
ஆற்றல் மிக்க அரங்கனே உன் ஞானமே
அகிலத்தை ஞானயுகமாக மாற்றி அருளும்
8. அருளாக வரமாக அறமாக
அனைத்துமாக அருளும் மகா சக்திகொண்ட அரங்கனே
வரம்தந்தேன் இன்று உன் சக்திகூடி
வையகத்தை ஞானயுகமாக மாற்றுவதற்கு

9. ஆகவே அரங்கனை தொடர்ந்துவர
அகிலத்தில் ஞானயுகமாற்றம் எனும் அற்புதம்
வரமாக சடுதி சித்திக்கும்
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–